Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU


ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 3 ஆம் நாள் துல்கஃதா 1 (16 3-64 திங்கட்கிழமை இதழ் 35


# அக்டோபருக்கு முன் சிங்களத்தில் தேர்ச்சி!

## தலைமை ஆசிரியர்களுக்கு கல்விஇலாகா அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு

**1-1-61-ல் 50 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தவிர்ந்த ஏனைய தலைமையாசிரியர்கள் எல்லோரும் அக்டோபர் முதல் திகதிக்கு முன்னர் சிங்களத் தேர்வுப் பரீட்சையில் 3-ம் வகுப்பு சித்தியடைய வேண்டுமெனக் கல்வி இலாகா அறிவித்துள்ளது. கல்விஇலாகா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

1964-ம் வருடம் மேமாதத்தில் நடைபெறவிருக்கும் சிங்கள தேர்வுப் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி மார்ச் 20-ம் திகதி முடிவடைகிறது குறிப்பிட்ட பகுதிஉதவி வித்யாதிபதியிடமிருந்து விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்று உதவிவித்தியாதிபதி மூலமாக பரீட்சைக் கமிஷனருக்குத் தமது விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பி வைக்குமாறு தலைமையாசிரியர்கள் கோரப்படுகிறார்கள். ஒருவர் ஒருசமயத்தில் ஒரு பிரிவுப் பரீட்சைக்கே தோற்ற முடியும்.

**தலைமையாசிரியர் மகாநாடு**

சிங்கள மொழித்தேர்ச்சி இல்லாத காரணத்தால் பதவி உயர்வும் சம்பள உயர்ச்சியும் நிறுத்தப்படும்நிலை உருவாகியிருப்பதனால் தமது நிலை என்ன என்பதனைப் பற்றி ஆராய தலைமையாசிரியர்களும் அதிபர்களும் விரைவில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

பாடசாலைகளில் தற்காலிகமாக அதிபர்களான உதவி ஆசிரியர்களின் நியமனம் உறுதிப்படுத்த வித்தியாபகுதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுபற்றியும் முக்கியமாக ஆலோசனைசெய்ய வேண்டும் என்ற அபிப்பிரா

(6-ம் பக்கம் பார்க்க)

## வெங்காய விற்பனையில் பல நோக்க சங்கங்கள் முயற்சி

நல்லூர், திங்கள்

இவ்வருடத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு உதவி புரிய இப்பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்துள்ளன,

விவசாயிகளிடமிருந்து வெங்காயங்களை வாங்கி பிற இடங்களுக்கு அனுப்பி வைக்க இச்சங்கங்கள் முயற்சிகள் எடுத்துள்ளன. இச் சங்கங்கள் வெங்காயங்களை விவசாயிகளிடமிருந்து நியாயமான விலைக்கு வாங்கி பிற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதனால் இங்குள்ள கூடைபின்னும் பெண்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது.

கூடைகளில் வெங்காயம் அடைக்கப்பட்டு கொழும்புக்கு லொறி மூலம் அனுப்பப்பட்டு வருகின்றது. தற்போது அந்தர் வெங்காயம் 21 ரூபா 28 சதமாக வாங்கப்படுகிறது இன்னும் இரண்டொரு வாரத்தில் வெங்காயத்தின் விலை அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெங்காயச் செய்கையில் ஈடுபட்டவர்கள் அந்தர் வெங்காயம் 60 ரூபாவாக வாங்கி விதைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வடபகுதியிலுள்ள சுமார் 70 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வெங்காயத்தை வாங்கி விற்பனை செய்வதில் சில சங்கங்களே ஈடுபட்டுள்ள போதிலும் கூட்டுறவு அதிகாரிகள் இச் சங்கங்களுக்கு ஆதரவளித்திருப்பதோடு, வெங்காயத்தை இச் சங்கத்திடமிருந்தே மற்றைய சங்கங்களும் பெற்றுக்கொள்ள வசதி செய்துள்ளார்கள்.

கடந்த வருடங்களைவிட இவ்வருடமே வெங்காயச்செய்கையிலீடுபட்டவர்களுக்கு விமோசனம் கிடைத்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முயற்சிகளுக்கு விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது.

## வட,கிழக்கு உள்ளூராட்சிசேவை சமாஜ அங்குரார்ப் பணம்

நல்லூர், திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றத்தலைவர்களைகொண்ட உள்ளூராட்சி சேவை சமாஜம் இம்மாத இறுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கின்றது. கடைசி வாரத்தில் சமாஜத்தின் விதிமுறைகள் வெளியிடப்படும்.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள இந்தச் சபைகளின் நிர்வாகத்தை தமிழிலேயே நடத்துவது என்பதும் தமிழ மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஓரணியாகத்திரண்டு நிற்பதற்கு இச்சமாஜம் முயற்சிக்கவேண்டும் என்பதும் முக்கியமான நோக்கங்களாக இருக்கவேண்டும் என்று வடபகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்,

ஒவ்வொரு புதுவருடத்திலும் இச்சமாஜம் தமிழ்ப் பிரதேசங்களில் ஒவ்வொரு பகுதியிலும் கூடி நிலைமையை அவதானித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் அபிப்பிரயம் தெரிவித்தனர்.

சமாஜத்தின் அங்குரார்ப்பண விழா இம்மாதம் 29-ம் திகதியளவில் நடைபெறலாமெனவும் இந்த அங்குரார்ப்பணவிழாவிற்குச் சமுகம் தருமாறுகேட்டுக்கொள்ளும் அழைப்பிதழ்கள் தயாராகிக்கொண்டிருப்புதாகவும் தெரிகிறது.

இவ்வாரத்தில் அழைப்புகள் உள்ளூராட்சி மன்றத்தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தியேட்டரில் டைனமைட் வெடித்தது

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலையிலுள்ள நெல்சன் தியேட்டரில் நேற்று பகல் காட்சியின்போது டைனமைட் வெடித்ததால் நான்கு பேர் படுகாயமுற்றனர்.

தியேட்டர் மீது டைனமைட் வீசப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக பொலிஸார் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மொழி மகாநாட்டின் நிலை; தமிழரசுக் கமிட்டி ஆராயும்

நல்லூர், திங்கள்

தமிழரசுக்கட்சியின் காரியக கமிட்டி இம்மாதம் 28, 29 ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கூடும்போது அவசரகாலச் சட்டம் பிரகடனஞ் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து உருவாகியுள்ளதுபற்றி ஆலோசிக்கவிருப்பதாக அறியப்படுகிறது. தற்போதுள்ள நிலையில் மொழி மகாநாட்டிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்று கட்சி அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மொழிப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் நடைபெறவிருந்த மொழி மகாநாட்டிற்கான ஆரம்ப முயற்சிகள் தற்போது மந்த நிலையை அடைந்துள்ளதனால் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைபற்றி கமிட்டிக் கூட்டம் ஆலோசனை நடத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் கமிட்டிக் கூட்டத்தில் கட்சிக் கிளைகள் அமைக்க தெரிவு செய்யப்பட்ட உபகுழுக்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள்பற்றியும் பரிசீலனை செய்யப்படுமெனத் தெரிகிறது.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டபின் நடைபெறும் கட்சியின் முதலாவது கூட்டமான இக்கூட்டத்திற்கு கட்சித் தலைவர் திரு எஸ். எம். இராஜமாணிக்கம் தலைமைவகிப்பார். வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கட்சி எம். பிக்கள் இக்கூட்டத்தில் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

## 'பொருளாதார விருத்தியில் பெண்களும் பங்குகொள்ள வேண்டும்'

### கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் ஸ்ரீகாந்தா உரை

மாவிட்டபுரம், ஞாயிறு

"இன்றைய உலகில் எமது பொருளாதாரநிலை வெகுவேகமாக மாற்றமடைந்து கொண்டு வருகிறது. எமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டநிலைகளை மாற்றி ஓர் புதிய பொருளாதார நிலையை நாம் ஏற்படுத்த வேண்டுமானால் ஆண்களுடன் பெண்களும சமமாக பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும்."

நேற்றிரவு நடைபெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரியின் முதலாவது பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா தமது பரிசளிப்பு பேருரையின் போது மேற்கண்டவாறு கூறினர். இவ்விழா கல்லூரி அதிபர் செல்வி பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

திரு. ஸ்ரீகாந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

6 ம் பக்கம் பார்க்க

## கிருமிநாசினி குடித்து மாணவன் தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த 19 வயதான கார்த்திகேசு வைரவநாதன் என்ற மாணவன் கிருமிநாசினி குடித்துத் தற்கொலை புரிந்து கொண்டான். திரு. எஸ். கனகரத்னம் மரண விசாரணை நடத்தினர்.

காலஞ் சென்றவரின் தாய் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"காலஞ் சென்ற கார்த்திகேசு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் எஸ். எஸ். சி. மாணவன். இந்த வருடம் பாடசாலைக்குப் போக அவன் மறுத்துவந்தான். புத்தகங்கள் வாங்கி விட்டதால் பாடசாலைக்குப் போகும்படி வற்புறுத்தினேன். கேட்கவில்லை அவன் மனவாட்டத்துடன் இருந்தான்."

அண்டையில் வசிக்கும் தம்பிப்பிள்ளை பரமனுதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"வீட்டில் ஏதோ சத்தம் கேட்டு நான் போய்ப்பார்த்தேன். கார்த்திகேசு கோப்பையில் ஏதோ குடித்துக்கொண்டிருந்தார். நான் அதை தட்டிவிட்டேன். ஆனல் திரும்பவும் குடிக்க முயற்சித்தார்.

"நெடுக என்னைப் பேசுகிறீர்கள். இன்றோடு தலையிடி நீங்கிவிட்டது. இனியாரைப் பேசபபோகிறீர்கள" என அவர் அப்போது கூறினர். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபின் மரணமானர். தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

**மணிவாக்கு**

சாதாரண மக்களையே ஆண்டவன் விரும்புகிறார். அதனால் தான் அவர்களை அதிகமாகப் படைத்துள்ளார்.

—ஆபிரகாம்லிங்கன்.

ஈழநாடு
EELA NADU
EELANADU, National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு பங்குனி மீ 3உ (16-3-64)

## அபிவிருத்திக்கு நிதி

அடுத்த நிதி வருடத்தில் அரசாங்கத்துறைக் கைத்தொழில்களுக்கு மேலும் ஏழரைக் கோடி ரூபாய் முதலீடு செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாகவும் இத்தொகையில் இரண்டுகோடி எழுபது லட்சம் உள்ளூர் மூலதனமாகுமென்றும் மிகுதி நான்கு கோடி எண்பது லட்சம் ரூபாயும் வெளிநாட்டு மூலதனமாகுமென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இது இன்றைய நிலையில் மகிழ்ச்சியளிப்பதாகவே உள்ளது. இத்தொகை சரியான முறையில் செலவிடப்பட வேண்டுமென்பதே பலரது விருப்பமுமாகும்.

தேசியஜவுளிக்கூட்டுஸ்தாபன விருத்திக்கு இரண்டு கோடியே முப்பத்தொரு லட்சத்து ஐம்பதினயிரம் ரூபாயும், இலங்கை சிமெந்து கூட்டு ஸ்தாபன அபிவிருத்திக்கு இரண்டு கோடியே பன்னிரண்டு லட்சத்து எழுபத்து மூவாயிரத்து அறுநூற்று எண்பத்தினலு ரூபாயும்செலவிடப்படுமென்றும்உருக்கு ஆலை கூட்டுஸ்தாபன முதற்கட்டட வேலைகளுக்கும், டயர் கூட்டு ஸ்தாபன முதற்கட்ட வேலைகளுக்கும் ஒரு தொகை ஒதுக்கப்படுமென்றும் அதே செய்தி கூறுகிறது. சிறு கைத்தொழில்களுக்கு 54,36,000 ரூபாயும் காகிதத் தொழிற்சாலைக்கு 31,70,000 ரூபாயும் ஒதுக்கப்படுமாம்.

ஜவுளி, சிமெந்து, டயர், காகிதம் ஆகியவைகளுக்கு இன்று நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பொருள்களின் இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு விதித்ததுடன் உள்நாட்டில் இவைகளின் உற்பத்தி நாட்டின் தேவையைச் சமாளிக்க முடியாமலிருப்பதே தட்டுப்பாட்டுக்குக் காரணமாகும். இப்பொருள்களின் உற்பத்திகளை விருத்தி செய்ய அரசாங்கம் முன்னரே முயற்சி செய்திருந்தால் இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் பொருட்களுக்குத் தட்டுபபாடும் ஏற்பட்டிருக்காது, மக்கள் கஷ்டப்படவும் நேரிட்டிருக்காது; கொள்ளை இலாபத்துக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்காது.

என்றாலும் காலம் கடந்த பின்னராவது அரசாங்கம் இம் முயற்சியை மேற்கொள்வது வரவேற்கத் தக்கதே. எனினும் அரசாங்கத்துறையில் இதுவரை கொட்டிய பெருந்தொகையான பணம் சரியான பலனைத் தரவில்லையென்பதும் இவ்விஷயத்தில் இனியாவது விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமென்பதையும் அரசாங்கத்துக்குச் சட்டிக் காட்ட விரும்புகிறோம்.

காகித இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதித்துள்ளதால் பாடசாலைப் பிள்ளைகள் முதல் பத்திரிகைகள் வரை பெரும் கஷ்டத்துக்குள்ளாக நேரிட்டுள்ளது. எனவே காகிதத் தொழிற்சாலையை உடனடியாக விருத்திசெய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியம்.

தேசிய சிறுகைத்தொழில்களுக்கும் சிறுதொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அரசியல், மற்றும் காரணங்களை மறந்து நாட்டின் நலனை மட்டுமே மனதில் கருதி இத்தொகையை பயன்படுத்த வேண்டுமென்பதே எமது கோரிக்கை. உத்தியோகமொழி அமுல் காரணமாக அரசாங்கசேவையை இழந்த, அனுபவமும் திறமையும் உள்ள பலர் தொழில் எதுவும் இன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் உள்ளனர். இவர்களுக்கு வாழ்வளிக்கவும் அவர்களின் திறமையைப் பயன் படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுகைத்தொழில்களை ஆரம்பிப்பது அரசாங்கத்தின் கடமை. இதே சமயம் அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராமல் வெங்காயக்கூடை பின்னல், பனம் பொருள் விருத்தி ஆகியவைகளில் ஈடுபடுவது வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழி. பனம் பண்டங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆவன செய்தால் உரசாங்கம் உதவி செய்யாமல் இருக்க முடியாது.

# ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்கு காணிகொடுக்க முடியாது

## யாழ்ப்பாண மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை மாலை மேயர் ரி. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்றபோது யாழ்ப்பாணத்தில் தரம் கெட்ட இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகவும், கலப்படம் செய்யப்பட்ட பால் விநியோகம் செய்யப்படுவதாகவும் இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கோரி திரு. ஏ. ஜி. இராஜசூரியர் கொண்டுவந்த இரண்டு பிரேரணைகள் சிறிது நேரம் விவாதத்தின்பின் அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

கொய்யாத்தோட்ட அங்கத்தவர் திரு ஏ ரி. துரையப்பாவுக்கு இரண்டுமாத லீவு வழங்கப்படுவதாகவும் கூட்டத்தில் மேயர் அறிவித்தார்.

### ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு

வெளி நோயாளர்பகுதியை விஸ்தரிக்குமுகமாக காணி தரும்படி கோரிய ஆஸ்பத்திரிக் கமிட்டித் தலைவரது கடிதம்பற்றி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக, ஹாஜி வி. எம். எம். அபுசாலி பேசும்போது இந்த ஆஸ்பத்திரிக்கு யாழ்ப்பாண மக்கள்மட்டுமன்றி வடமாகாணத்திலுள்ள பல்வேறு மக்களும் மருந்து பெறுவதற்காக வருகின்றார்களென்றும் அவர்களது நன்மைகளைக் கருதி காணி கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமென்றும் கூறினார்.

துரைராஜசிங்கம்: ஆஸபத்திரிக்கு நாங்கள் கொடுக்கும் நிலத்தை திரும்பப் பெறமுடியாது. முன்பு மின்சார நிலைய வீதியைப் பறிகொடுத்தோம். மீண்டும் அதே பிழைய விடுவது எமக்குத்தான் ஆபத்து. அரசாங்கம் எங்கும் ஆஸபத்திரி ஆரம்பிக்க முடியும். 'முனியப்பர் கோவில்' வீதியையும் முன்னர் பறிகொடுத்துள்ளோம். ஆதலால் இதையும் கொடுப்பது நல்லதல்ல.

செல்லத்துரை:- ஆஸபத்திரி கட்ட வேறு இருக்கின்றது.

மேயர்:- ஆஸபத்திரி வளவிற்குள் போதிய அளவு இடமிருக்கிறது.

துரையப்பா:- நிலம் கொடுப்பதற்கு இச்சபை முன்பு தீர்மானித்திருக்கிறது. வெளி நோயாளர்களுக்கு ஆஸபத்திரி கட்ட அரசாங்கம் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கிவைத்துள்ளது. நாங்கள் இடங்கொடுக்காவிட்டால் இந்த 5 லட்சம் ரூபாயும் சிங்கள மாகாணங்களுக்குப்போய் விடும். இந்தக் கட்டடத்தை வீணாகப் பறிகொடுக்க நேரிடும் முனியப்பர் கோவில் வீதியை எல்லோரும் ஒத்துக் கொடுத்துவிட்டு இப்போது மறுக்கிறார்கள்.

ராஜசூரியர்:- நான் ஒத்துக் கொடுக்கவில்லை.

துரையப்பா:- இதனால் மக்களுக்குப் பெரிய நன்மை ஏற்படும். இது ஒரு சிறிய வீதி. மக்கள் வேறு வீதியால் போகலாம். ஆதலால் ஆஸபத்திரிக் கட்டடம் போடுவதானல் தருகிறோம். இல்லாவிட்டால் திருப்பித்தரவேண்டும் என்று கூற வேண்டும்.

மேயர்:- சபையில் பணம் இல்லை. காணியும் வாங்க முடியாது. அரசாங்கம் நினைத்தால் வேறு காணி எடுத்து ஆஸ்பத்திரி கட்டக் கொடுக்கலாம்.

சோமசுந்தரம்: இதைப்பற்றித் தீர்மானிக்க அவகாசம் வேண்டும்.

மேயர்:– ஆஸபத்திரி வளவுக்குள் இடமிருக்கிறதென்று அறிவிப்போம்.

மகாதேவா:- இந்த வீதி 20 அடி அகலம்தான் இருக்கும். இதில் கட்டடம் போடமுடியும் என்று நான் கருதவில்லை.

துரையப்பா:- அதில் மேல் மாடி கட்டலாம்.

நாகராஜா:- ஆஸபத்திரிக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் 5 லட்சம் ரூபாவை வீணாக்காமல் கட்டடத்தைக் கட்ட வேறு ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டும்படி தெரிவித்துக்கொள்ளலாம்.

இப்பிரேரணை வாக்குக்கு விடப்பட்டபோது சாதகமாக இரண்டு வாக்குகளும், பாதகமாக ஏழு வாக்குகளும் கிடைத்தன.

### பிரசவ விடுதிகளுக்கு தொலை பேசி

அத்தியாவசிய தேவையை முன்னிட்டு எல்லா வட்டாரங்களிலுமுள்ள 'பிரசவ விடுதி' களுக்குத் தொலைபேசி இணைப்புச் செய்யவேண்டுமென்ற பிரேரணையை திரு. த. கந்தையா கொண்டுவந்தார்.

திரு. அ. நடராஜா பேசுகையில் சபை அங்கத்தவர்களுக்கும் தொலைபேசி வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டுவந்தபோது திரு. இராஜசூரியர் பிரசவ விடுதிகளுக்கும், அங்கத்தவர்களுக்கும் யாது சம்பந்தம் என்று கேட்டார்.

மகாதேவா:- எல்லா வட்டாரங்களிலும் உள்ள பிரசவ விடுதிகளுக்கும் டாக்டர்கள் செல்கிறார்களா?

மேயர்:- அவசர தேவைகளுக்குச் செல்கின்றார்கள்,

பிரேரணை நிறைவேறியது.

18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு மாநகரசபையின் எந்தப்பகுதியிலும், குறிப்பாக மலசல சுத்தி, நகரசுத்தித் தொழில் பகுதிகளிலும் வேலை கொடுக்கக்கூடாது என்ற பிரேரணையை திரு. சி. நாகராஜா கொண்டுவந்தார்.

இப்பிரேரணையைப்பற்றித் துரைராஜசிங்கம்பேசியபோது குறிப்பிட்டதாவது:-

மலசலசுத்தி செய்யும் தொழில் மிகவும் கடினமானது. இவர்கள் படிக்கவும் வசதியில்லாமல் கஷ்டப்பட்டு வருகிறார்கள். கங்காணிமாரிடம் இவர்களின் வயதைக் கேட்டால் இருபத்தினன்கு என்று கூட்டிக் கூறுகின்றார்கள். இப்பிரேரணையின் படி 18 வயதிற்கு உட்பட்டோருக்கு வேலையில்லையெனல் தற்போதுள்ள பாதிப்பேர் வேலையிழக்க நேரிடும். இவர்களை நிறுத்தியவுடன் மிகவும் கஷ்டம் ஏற்படும். ஆதலால் வேறு ஆட்களை எடுத்துவிட்டு இவர்களை நிறுத்துவதே நல்லது.

செல்லத்துரை: சிலர் பெரியவர்கள் தங்கள் பெயர்களைப் பதிந்துவிட்டு சிறுபிள்ளைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள்,

துரைராஜசிங்கம்: இதை நிறைவேற்றினல் நிம்மதியாக இருக்க முடியாது. இன்னும் 10 வருடத்தில் கூட்டுவதற்கு ஆட்கள் கிடையாமல் கஷ்டப்பட நேரிடும்.

மேயர்: இவ்விஷயத்தைச் சுகாதாரக் கமிட்டிக்கு விட்டுவிடுவோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

# குரு, சனிமாற்றம் என்னசெய்யும்?

சிவாகமஜோதிஷபூஷணம் ச ப ஷ சுந்தரக்குருக்கள்
(ஆனைக்கோட்டை)

15-3-64ல் வியாழனும், 4-4-64-ல் சனீஸ்வரனும் இராசி மாறிச் செல்கிறார்கள். குருபகவான் யுத்தகாரகன் வீட்டிற்கும், சனி தன் வீடாகிய கும்பராசிக்கும் செல்வதால் என்ன பலன்களைத் தரப்போகிறார்களென ஆவலுடன் எதிர்பார்ப்பது இயற்கையே.

கற்கடகம், கன்னி, விருச்சிகம் ஆகிய இராசிகளில், ஜெனனமானவர்களுக்கு மிகச் சோதனை காலம் எதிர்நோக்கி வருகின்றது. இவர்கள் விவாகம், புதியமனை கோலல், புதிய மனைப் பிரவேசம், புதிய வியாபாரம் தொடங்குதல், வாகனம் கொள்ளல் விற்றல், இடமாற்றம், வழக்கு, பிணக்கு விவகாரங்களில் உஷாராக இருக்கவும் மேற்கூறியவைகளில் ஈடுபாடு இல்லாதிருக்கின் விவேகமானதாகும்.

ஈழத்திலும், இந்தியாவிலும், மற்றும் கிழக்காசிய நாட்டிலும், சில பெரியார்கள் மறைவுக்கு இடமுண்டு.

சிங்கம், கும்பம், துலாம் ஆகிய இராசிக்கு இலக்கானவர்கள், குடும்பப் பிணக்குகள், காதலில் தோல்வி, பந்துஜன விரோதம், பணவிரயங்களால் கவலை முதலான கஷ்டம் பல அனுபவிப்பர்.

அடுத்த ஓராண்டு காலமும், கண்ணியவான்கள் சிலரின் புண்ணியச் செயல்கள் குன்றும், நெஞ்சு தட்டிப் பேசியோர் அஞ்சி ஒதுங்க; வஞ்சகர் சிலரின் மிஞ்சி நடமாடும் அட்டகாசங்கள் அதிகரிக்கும். அரசியல் அரங்கத்திலே புரட்சி என்னும் சொல்லுக்குப் புரட்சி காணும், பஞ்சமும், பசிப் பிணியும் கொஞ்சக் காலம் நீடித்திருக்கும், திருடர் கைவரிசை மேலும் அதிகரிக்கக் கூடும். உஷாராய் இருங்களென மக்களுக்கு எச்சரிக்கை செய்வதைத்தவிர வேறில்லை.

## ஐயாறன் எழுதுவது

அனுராதபுரத்தில் யாழ் தேவிநின்றதும், கைவிலங்கிட்ட ஒருவரும் பொலிஸ்காரரும் ரயிலில் ஏறி என் பக்கத்தில் அமர்ந்தனர். பல கண்களும் விலங்கிட்டவரையே பார்த்தன. நல்ல தேகக்கட்டுடன் கண்யமாகக் காணப்பட்டார் அவர். பாவம், அவர் முகத்தில் ஈயாடவில்லை. பார்க்கமிக வேதனையாக இருந்தது. அதனால் வேறிடம் சென்று ஒருமணி நேரத்துக்குப்பின் அங்குவந்தேன்.

கள்ளத்தோணி இந்தியர் என்று பலரும் சிங்களத்தில் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு தான் விஷயம்புரிந்தது. பேசாமல் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த அந்த விலங்கு மனிதரிடம் மெதுவாகப் பேச்சுவிட்டேன். எந்த ஊர் என்று கேட்டேன். தமக்கு இந்தியாவில் திருநெல்வேலிக்குப் பக்கம் என்றார். இங்கு வந்து 15 வருடங்களுக்கு மேல் ஆகிறதாம்.

கொழும்பில் 5 வருடகாலம் துறைமுகத்தில் வேலை செய்தபோது ஒரு மூட்டை தவறி விழவே கால் முறிந்தது. இரண்டு வருடகாலம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதில் நல்ல வேளையாக கால் குணமடைந்தது. முதலாளியிடமிருந்து கிடைத்த ரூ. 900 நஷ்டஈட்டுப் பணத்திலே வழக்கு செலவுக்காக 600 ரூபாய் செலவழிந்ததாம். பின்னர் கல்யாணம்பேசி, அனுராதபுரத்திலே ஒரு பெண்ணை விவாகம் செய்தார். விவாகத்துக்குப் பின் அனுராதபுரம் சென்று ஏதோ கூட்டுறவு யூனியனில் சில வருடம் வேலைசெய்துவிட்டு பின்னர் பல சில்லறைத் தொழில்களிலும், சூதாட்டத்திலும் ஈடுபட்டாராம். முதலில் பண வருமானம் அதிகம்.

ஐந்து குழந்தைகளில் இரண்டு "மவுத்" ஆகிவிட்டன. வருமானமும் குறைந்தது. பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் வரவேண்டும். இரண்டாயிரம் கடன். ரிஸ்ட்வார்ச், மோதிரம், மனைவி நகை முதலியன அடகில், கொடுக்கவேண்டியவர் கொடுக்கவில்லை. மனைவிக்கு பேறுகாலம்.

ஒரு பொலிஸ்காரர் "பகா" கொடுக்கும்படி அடிக்கடி தொந்தரவு செய்தாராம். மறுக்கவே 'கள்ளத் தோணி' என்று சொல்லி தம்மைத் திடீரெனக் கைதுசெய்துவிட்டதாயும் தாம் வந்தது முதல் இந்தியாவே செல்லவில்லை என்றும் தன் சோகக் கதையைச் சொன்னார். அவர் மீது பல பொய் வழக்கு சோடிக்கப்பட்டுள்ளதாயும் தமது சாட்சியை நிரூபிக்கத் தம்மிடம் விவாகப்பத்திரம் எல்லாம் இருப்பதாயும் சொன்னார். ஆனால் ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா?

* * *

பிறநாட்டில் வந்து இப்படி அவமானப் படுவதைவிட சொந்த நாட்டில் பட்டினி கிடந்தும் சாவது மேலென்றும் இந்தியாவில் பிழைப்புக்கு ஏதாவது வழி கிடைக்காதா என்றும் கேட்டேன். இந்தியா திரும்பிவிடவே தாம் விரும்புவதாயும், ஆனல் தமது இலங்கை மனைவியையும் குழந்தைகளையும் தம்முடன் அழைத்துச் செல்ல சட்டம் இடமளிக்காது போகலாமென்றும் இங்குவரவேண்டிய பணத்தை வசூலிக்க முடியாமல் வெறும் கையுடன் இந்தியா திரும்பினல், தன் ஊற்றார் உறவினர் கேலிசெய்வரென்றும் சொல்லி கலங்கினர்.

இனிமேல் சூதுவிளையாடப் போவதில்லை என்றும், அந்தப் பணம் உருப்படியாகவில்லையென்றும், தம் வாழ்க்கையில் இது தான் தாம் கற்ற பாடமென்றும் சொன்னர். புருஷன் கொழும்புக்குக்கொண்டு போகப்பட்டது கர்ப்பிணியான மனைவிக்குத் தெரியாதாம். இனி

(6-ம் பக்கம் பார்க்க)

# ஜாக்ரூபிக்கு மரண தண்டனை!

## ஒஸ்வால்ட் கொலை வழக்கில் டல்லாஸ் நீதி மன்றம் தீர்ப்பு

### அப்பீல் தாக்கல் செய்யப்படலாம்

டல்லாஸ் (டெக்ஸாஸ்) மார்ச் 5

அமெரிக்காவின் 35-வது ஜனாதிபதி திரு. ஜோன் எவ். கென்னடியைச் சுட்டுக் கொலை செய்த லீ ஹார்வி ஒஸ் வால்ட்டை மிகவும் நெருங்கிய தூரத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த ஜாக் ரூபிக்கு டல்லாஸ் நகர நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

ஜூரிமார்களின் ஏகமனதான தீர்ப்பிற்கிணங்க 52 வயதுள்ள ஜாக்ரூபி மின்சாரக் கதிரையில் அமர்த்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படும். ஜாக்ரூபியின் வழக்கறிஞர் ஒருவர் நேற்றுத் தெரிவிக்கையில, ஜாக்ரூபிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆட்சேபித்து அப்பீல் செய்யப் போவதாகக் கூறினர்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடியை 24 வயதுள்ள லீ ஹார்வி ஒஸ்வோல்ட் சுட்டுக் கொலை செய்த இரண்டு நாட்களுக்குப்பின்னர் ஒஸ்வோல்ட் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். ஒஸ்வோல்ட்டை ஒரு சிறையிலிருந்து வேறு ஒரு சிறைக்கு அழைத்துச் செல்ல முயற்சித்த பொழுது ஒஸ்வால்ட்டைப் பார்த்துக் கொண்டு சிறை அதிகாரிகளுக்கு அண்மையில் கூடியிருந்தவர்களுள் ஒருவராக நின்ற ஜாக்ரூபி, மிகவும் நெருங்கிய தூரத்தில் வைத்து கைத்துப்பாக்கியொன்றினுல் ஒஸ்வோல்ட்டை இரண்டு தடவைகள் சுட்டார். வயிற்றில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஒஸ்வோல்ட் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கே மரணமானர்.

இதனைத் தொடர்ந்து ஒஸ்வோல்ட்டைக் கொலை செய்ததாக ஜாக்ரூபிமீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 'கிளப்'பொன்றின் சொந்தக்காரரான 52 வயதுள்ள ரூபி, ஜனாதிபதி கென்னடி சுடடுக் கொலை செய்யப்பட்டதைக் கேட்டு அதிர்ச்சியுற்றதனுல்தான் ஒஸ்வால்ட்டை அவர் கொலை செய்தார் என்றும் அவரின் மனநிலையில் அப்பொழுது தடுமாற்றம் ஏற்பட்டிருந்ததென்றும் ரூபியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

ஜாக்ரூபிமீதான வழக்கு டல்லாஸ் நகர நீதிமன்றத்தில் ஒரு மாதகாலமாக விசாரணை செய்யப்பட்டு இரண்டு தினங்களுக்கு முனனர் முடிவடைந்தது. விசாரணைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து நீதிபதி ஜூரர்களுக்கு அவகாசமளித்தார். ஒஸ்வோல்ட்டைக் கொலைசெய்த ஜாக்ரூபிக்கு மரணதண்டனை விதிக்க வேண்டுமென்று ஜூரர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து அவருக்கு நீதிபதி நேற்று மரண தண்டனை விதித்தார்.

ஜாக்ரூபியின் வழக்கறிஞர்கள் வேறு ஒரு கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாண்டவர் மீண்டார்

### ருஷ்ய விஞ்ஞானிகள் சாதனை

மாஸ்கோ, மார்ச் 15

இறந்த ஒருவரை பின்னர் உயிர்ப்பித்த சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது. இறந்த மூன்று மணி நேரத்துக்குப் பின்னர் ஒருவருக்கு உயிர் கொடுத்த சாதனையை சோவியத் விஞ்ஞானிகள் நிலைநாட்டியுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்த மூன்றுமணி நேரத்துக்குப்பின்னர் ஒருவர் மீண்டும் உயிர்பெற்றது இதுவே முதல் தடவை.

## கண்டனம்

கல்கத்தா, மார்ச் 15

இங்கு, நேற்று நடைபெற்ற கிறிஸ்தவர்களின் கூட்டமொன்றில்; கிழக்குப் பாகிஸ்தானில் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்பட்டது. இக் கூட்டத்தை கிறிஸ்தவ சபை ஒழுங்கு செய்திருந்தது.

## கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 15

தமிழ்நாடு சட்டசபையில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவரொருவர் பேசுகையில் ஜாதி அடிப்படையில் திருமணம் நடைபெறுவதை ஒழிக்க சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

## கி. பாகிஸ்தான் துருப்புகளின் வலுத்தாக்குதல் அதிகரிப்பு

### அஸாம், திரிபுரா எல்லையில் காவல் நிலைகளையும் அமைத்துள்ளனராம்

புதுடில்லி, மார்ச் 15

அஸாம், திரிபுரா எல்லைகளில் கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினரின் வலுத்தாக்குதல்கள் இப்பொழுது அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக திரிபுரா அரசாங்கம் கிழக்குப் பாகிஸ்தானுக்கு கண்டனக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளது.

திரிபுரா வடக்கு எல்லையிலும் திரிபுராவின் கிழக்கு எல்லையிலும் கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினர் ஆத்திரமூட்டும் செயல்களில் இறங்கியுள்ளனர் என்றும், இவர்களுடன் மற்றைய படைகளும் சேர்ந்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல நாட்களாகக் கிழக்குப் பாகிஸ்தான் துருப்புகள் இந்தப் பகுதியில் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். எல்லைகளில் கிழக்குப் பாகிஸ்தான் துருப்புகள் தொடர்ச்சியாக குவிக்கப்பட்டுவருகின்றனர். திரிபுரா, அஸாம் எல்லைகளில் புதிய சாலைகளையும், காவல் நிலையங்களையும் கிழக்குப் பாகிஸ்தான் துருப்புகள் அமைத்துவருகின்றன.

## சமாதானபடையின் முதற்கோஷ்டி சைப்பிரஸ் வந்தது

### பலாத்காரம் வேண்டாமென்று துருக்கி பிரதமருக்கு குருஷ்சேவ் கடிதம்

நிகோஸியா, மார்ச் 15

சைப்பிரஸ் நெருக்கடியைத் தவிர்த்து அங்கு சமாதானத்தை நிலைநாட்டும்பொருட்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனுக ஐ.நா. சமாதானப் படையின் முதல் கோஷ்டி இன்று சைப்பிரஸ் வந்து சேர்ந்தது. இக்கோஷ்டியில் கனடா நாட்டுத் துருப்புகள் உள்ளனர்.

ஆயிரம் துருப்புகளைக் கொண்ட இக்கனடா கோஷ்டியில் ஒரு பகுதியினர் மட்டுமே இப்பொழுது இங்கு வந்துள்ளனர். மற்றவர்கள் இவ்வாரத்தில் இங்கு வந்து சேருவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுவீடன், பின்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளும் தங்களது துருப்புகளை சைப்பிரஸுக்கு அனுப்பி வைக்கும். மேற்கூறப்பட்ட ஒவ்வொரு நாட்டிலிருந்து 700 துருப்புகள் இங்கு வருவர்.

#### மக்காரியஸுக்கு குருஷ்சேவ் கடிதம்

சைப்பிரஸ் அதிபர் ஆர்ச். பிஷப் மக்காரியஸுக்கு சோவியத் பிரதமர் குருஷ்சேவ் அனுப்பிய தனிப்பட்ட கடிதமொன்றை நேற்று இங்குள்ள சோவியத் தூதர், சைப்பிரஸ் அதிபரிடம் சமர்ப்பித்தார். கடிதத்தின் விபரம் அறிவிக்கப்படவில்லை.

துருக்கிப் பிரதமர் திரு. இஸ்மத் இனுனூவுக்கும் சோவியத் பிரதமர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். இக்கடிதத்தை அங்காராவிலுள்ள சோவியத் தூதர், துருக்கிப் பிரதமரிடம் சமர்ப்பித்தார். சைப்பிரஸில் சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொள்ளும்படியும் பலாத்காரத்தை உபயோகிக்கவேண்டாமென்றும் சோவியத் பிரதமர் குருஷ்சேவ் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று துருக்கியில் ஏராளமான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அமெரிக்காவையும் பிரிட்டனையும் அவர்கள் கண்டித்தனர். இதுபோலவே சைப்பிரஸிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறுது.

சைப்பிரஸில் இப்பொழுது அமைதி நிலவுகிறதென்றும் நிலைமை திருப்திகரமாகவிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 9,00,000 அனுதாபச் செய்திகள்

### திருமதி கென்னடிக்கு வந்துள்ளது

வாஷிங்டன், மார்ச் 15

திருமதி ஜாக்குலின் கென்னடிக்கு இப்பொழுதும் அனுதாபச் செய்திகள் வந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் கென்னடி கொலைசெய்யப்பட்டு நான்குமாத காலமாகியும் திருமதி கென்னடிக்கு தினமும் சுமார் ஆயிரம் அனுதாபக் கடிதங்கள் வருகின்றனவென்றும் இதுவரை 9,00,000 அனுதாபச் செய்திகள் அவருக்கு வந்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்

## மாநாட்டுக்கு வரவேற்பு

பெல்கிரேட், மார்ச் 15

மார்ஷல் டிட்டோவும் அதிபர் பென்பெல்லாவும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், நடுநிலைமை நாடுகளின் மாநாட்டைத் தாங்கள் வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## டக்ளஸ் ஹியூம் லாகோஸ் செல்வார்

லண்டன், மார்ச் 15

இவ்வாரத்தில் லாகோஸ் செல்லும் பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் அங்கு நைஜீரியப் பிரதமருடன் பேச்சுகள் நடத்துவார். சர்வதேச விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் பேச்சுகள் நடத்துவார்களென்று கூறப்படுகிறது.

## சுகர்ணோவை சந்திக்கும் எண்ணம் மனதிலும் கிடையாது

### மலேஷியப் பிரதமர் துங்கு அறிவிப்பு

கோலாலம்பூர், மார்ச் 15

மலேசியா தகராறை சமாதானமாகத் தீர்த்து வைக்கும் விருப்பம் அதிபர் சுகர்ணோவுக்கு சிறிதளவும் கிடையாதென்றும் சுகர்ணோவைச் சந்திக்கும் எண்ணம் தமக்கு மனதிலும் ஏற்படவில்லையென்றும் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கோலாலம்பூரில் மலேசியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மான் நேற்று தெரிவிக்கையில், மலேசியாத் தகராறை இந்தோனேஷியா வேண்டுமென்றே நீடிக்கிறதென்று கூறினர்.

"மலேசியா சம்பந்தமாக உச்சி மகாநாடொன்று நடைபெற்ருல், அந்த மகாநாட்டில் இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோவைச் சந்திக்க நான் விரும்பவில்லை. மலேசியாத் தகராற்றை வேண்டுமென்றே நீடித்து நெருக்கடியைத் தோற்றுவிக்கும் இந்தோனேஷியாவின் கொள்கைகள், பேரபாயத்தைத் தோற்றுவிக்கக் கூடியன" என்றும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

மலேசிய தகராறைத் தீர்த்து வைப்பதில் எமது நாடு சமாதான வழிகளையே இதுவரை கையாண்டு வந்தது. இனிமேலும் அவ்வழிகளையே நாம் கடைப்பிடிப்போம். ஆனல், இந்தோனேஷியா பலாத்காரத்தைப் பிரயோகிக்கின்றது. இதற்கு மலேசியா அடிபணிய முடியாது என்றும் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் குறிப்பிட்டார்.

இந்தோனேஷியாவில் எழுந்துள்ள மலேசிய நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டே இராணுவத்துக்கு ஆட்கள் திரட்டப்படுகின்றனர். இத்திட்டம் கடந்த செவ்வாய் கிழமை முதல் செயல்பட்டு வருகிறதென்றும் அவர் கூறினர்.

## காஷ்மீர் பற்றி சாதிக்

ஸ்ரீநகர், மார்ச் 15

காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் நேற்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில்; காஷ்மீரைப் பிரிக்க உலகில் எந்தச் சக்தியினுலும் முடியாதென்றும் பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த ஒரு பகுதியென்றும்கூறினர்.

## சாதுக்களுக்கு பயிற்சி லஞ்ச ஊழல் ஒழிக்க

புதுடில்லி, மார்ச் 15

நாட்டில் நிலவும் லஞ்ச ஊழல்களை ஒழிக்கும்பொருட்டு இந்திய அரசாங்கம் புதிய வழியொன்றை வகுத்துள்ளது. சாதுக்களுக்கு பயிற்சி அளித்து அறநெறியில் லஞ்ச ஊழல்களை ஒழிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், புதுடில்லியில் 29 பேருக்கு முதலில் பயிற்சி அளிக்கப்படும்.

## சமாதான பேச்சுக்கள்

வியண்டைன், மார்ச் 15

ஜார்ஸ் சமவெளியில் சந்தித்து சமாதானப் பேச்சுக்கள் நடத்த லாவோஸ் நடுநிலைமை பதட்லாவோ தலைவர்களிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சு, சங்கீத போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண ஆசிரியர் சங்கக் கல்விக்குழு சென்ற சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வடமாகாணப் பாடசாலை மாணவ மாணவிகளுக்கிடையே இறுதி பேச்சு, சங்கீத போட்டிகளை நடத்தியது. இப்போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளினதும் மாணவர்களினதும் பெயர்கள் வருமாறு:-

**தமிழ்ப் பேச்சு**

ஆண்கள்: மேற்பிரிவு:- எஸ். பத்மநாதன்-விக்டோரியா (முத்துக்குமாரு வெற்றிக் கிண்ணம்) என். பத்மநாதன் - மகாஜனக் கல்லூரி, ஏ. இ. மனோகரன் - பரியோவான்.

மத்தியபிரிவு:- கா. சாந்திநாதன் - மகாஜன, என். சிறிகாந்தா - காரைநகர் இந்துக் கல்லூரி, எஸ். இராஜாராம் - யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

கீழ்ப்பிரிவு:- டி. விசுவரத்தினம் - சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி, கே. ஜெயசீலன் - மல்லாகம் இந்துக்கல்லூரி, ஏ. விபுலானந்தம் - யாழ்பபாணம் இந்துக் கல்லூரி.

பெண்கள்: மேற்பிரிவு:- இ. தேவமனோகரி - உடுப்பிட்டி மகளிர் (கணேசலிங்கம் கேடயம்) எஸ். வீரலட்சுமி - மானிப்பாய் மகளிர், சாரதாதேவி - மகாஜனக் கல்லூரி.

மத்திய பிரிவு: கா. கீர்த்திராணி - பண்டத்தரிப்பு மகளிர், எஸ். பாலாம்பிகை - நெல்லியடி ம. ம. வித்தியாலயம், ச. விஜயலட்சுமி - உடுப்பிட்டி மகளிர்.

பெண்கள்: கீழ்ப்பிரிவு:- ஆர். இந்திராணி - ஸ்கந்தவரோதயா, எஸ். ஞானலோசனி - கொக்குவில் இந்து, த.விமலாதேவி - உடுப்பிட்டி மகளிர்.

**தனித்துப்பாடல்**

பெண்கள்: கீழ்ப்பிரிவு:- எஸ். பிராணேசுவரி-சிதம்பரா, எஸ். வசந்தா - யூனியன், எஸ். பவானி - யூனியன்.

பெண்கள்: மேற்பிரிவு:- எஸ். அருந்ததி - வேம்படி (பரம்

(5-ம் பக்கம் பார்க்க)

# வித்தியாலங்கார பல்கலைக்கழகம் ஒருவாரத்துக்கு மூடப்பட்டது

## குருகுல வித்தியாலய மாணவருடன் ஏற்பட்ட கைகலப்பின் எதிரொலி

கொழும்பு, ஞாயிறு வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் (பிக்கு மாணவர்களும் சாதாரண மாணவர்களும்) களனி குருகுல வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பில் குருகுல வித்தியாலயத்தைச் சேர்ந்த முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் காயமுற்றனர்.

இந்த மாணவர்களில் 6பேர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து களனிப்பகுதியில் குழப்பமான சூழ்நிலை நிலவிவருகிறது. இப்பகுதியிலுள்ளவர்கள் தம்மைத் தாக்கிவிடுவார்களோ என்ற அச்சம் காரணமாக வித்தியாலங்கார பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியே செல்ல முடியாதிருக்கிறார்கள்.

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து வித்தியாலங்கார பல்கலைக்கழகம் ஒருவாரம் வரை மூடப்பட்டுள்ளது.

குருகுல வித்தியாலயத்தில் வலைபந்தாட்டம் ஆடிய மாணவிகளை பல்கலைக் கழக மாணவர்கள் பரிகாசம் செய்வதைத் தொடர்ந்தே இக்கைகலப்பு ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

குருகுல வித்தியாலயத்து விஞ்ஞான ஆய்வுகூடம் பெரும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மீண்டும் கலகங்கள் ஏற்படாதவாறு தடுக்க இப்பகுதியைப் பொலிஸார் காவல் புரிந்து வருகின்றனர்.

# கூப்பன் துண்டுகளை விற்பனை செய்வதுகுற்றம்

கொழும்பு, ஞாயிறு ஒருவர் தமக்குரிய பங்கீட்டரிசி புத்தகத்திலுள்ள 104-ம் இலக்க கூப்பன் துண்டை மற்றவருக்கு விற்பனை செய்வது சட்டவிரோதமான செயல் எனக் கருதப்படும்.

இந்தக் கூப்பன் துண்டை இரண்டு ரூபாவுக்கு விற்பது கள்ளச்சந்தைக்காரரை ஊக்குவிப்பது மட்டுமல்லாது பெரும் நஷ்டமாகவுமிருக்குமென்றும் இக் கூப்பன் துண்டின் உண்மையான விலை சுமார் 8 ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு. விவசாய, கூட்டுறவு அமைச்சினல் பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தினல் இறக்குமதி செய்யப்படும் துணிகளை விநியோகிப்பதற்கு அரசாங்கம் சமீபத்தில் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. இத் திட்டத்தின்படி பங்கீட்டரிசிப் புத்தகத்திலுள்ள 104-ம் இலக்க கூப்பன் துண்டை கூட்டுறவுச் சங்கங்களிலோ கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் சில்லறைக் கடைகளிலோ சமர்ப்பித்துத் துணிகளை வாங்கிக் கொள்ளலாம்.

1964-ம் வருடம் ஜூன் 30-ம் திகதிக்கு முன்னர் இத்தகைய ஒவ்வொரு துண்டுக் கூப்பனுக்கும் பாவனையாளர் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் 4 யார் துணி பெற உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளார்கள்.

சமீபத்தில் மேற்படி அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகஸ்தர்களாலும் கூட்டுறவுச்சங்கங்களைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களாலும் நடத்தப்பட்ட பரிசோதனையில் சில வியாபாரிகள் இக் கூப்பன் துண்டுகளை பங்கீட்டரிசிப் புத்தகம் வைத்திருப்பவர்களிடம் சுமார் இரண்டு ரூபா கொடுத்து வாங்கி பின்னர் கள்ளச் சந்தையில் விற்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் கூப்பன் துண்டை விற்பனை செய்வது விற்பனை செய்யும் ஒருவருக்குப் பெரும் நஷ்டத்தைத் தருவதோடு கள்ளச் சந்தைக்காரரையும் ஊக்குவிப்பதாக இருக்கிறது. இவ்

(5-ம் பக்கம் பார்க்க)





அனுதினமும் நெற்றி வியர்வை சிந்தி, வயலில், உற்பத்திசாலையில், தொழிற்சாலையில், அல்லது காரியாலயத்தில் உழைக்கும் அவருக்கு நிரம்பிய பலமும் சக்தியும் அவசியம். ஆகவே அவருக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவரை அனுதினமும் திடகாத்திரமாகவும் சுகமாகவும் இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்


# "சமயப் பெரியார்களுடன் நாவலரை ஒப்பிடமுடியாது"

## தமிழர் திருநாளில் கனக செந்திநாதன் கருத்து

நல்லூர், திங்கள் "ஆறுமுகநாவலரை சமயப் பெரியார்களான நாயன்மார்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதில் சிலர் ஈடுபட்டுள்ளார்கள் இது தவறான அபிப்பிராயமாகும் நாயன்மார்களின் பணிகளும நாவலரின் பணிகளும் வெவ்வேறு வகைப்பட்டவை. நோக்குகளும் வெவ்வேறுவிதமானவை" என்று அண்மையில் இசைத்தமிழ்மன்ற ஆதரவில் நடைபெற்ற தமிழர் திருநாளில் உரைநிகழ்த்திய திரு. கனக செந்திநாதன் குறிப்பிட்டார்.

வண்ணை அரசடி விநாயகராலய மண்டபத்தில் நடைபெற்ற இந்தத் தமிழர் திருநாள் உரையரங்கிற்கு திரு. ஆர். சி. மன்மதராஜன் தலைமைவகித்தார். விழா ஆரம்பத்தில் நல்லூர் கைலாசநாதர் கோவிலில் இருந்து ஊர்வலம் புறப்பட்டது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உபயோகித்த உத்தரியம், உருத்திராக்க, கம்பளப் போர்வை ஆகிய சின்னங்கள் அவரின் வழித்தோன்றலான காலஞ்சென்ற திரு.பி, முத்துக்குமாரு இல்லத்தில் பொதுமக்களின் தரிசனத்திற்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த ஊர்வலத்தில் திருவள்ளுவர், நாவலர், விபுலானந்தர், பாரதி ஆகியோரின் திரு இருவப்படங்கள மேள்வாத்தியங்களுடன் விழா மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டன.

திரு. கனகசெந்திநாதன் தொடர்ந்து பேசியதாவது:

அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவமும் தமிழும் கீழ்நிலை அடைந்தபோது நாவலர் அவதரித்தார். எமது சமயமும் அழிந்து படுமோ என்ற அச்ச நிலவியகாலத்தில் நாவலரின் தோற்றம் இன்றியமையாததாயிருந்தது.

நாவலர் தமது குறைந்தகால வாழ்க்கையில் செய்த தொண்டுகள் அளப்பில. அவருடைய தொண்டுகளை இப்போதுள்ளவர் செய்யமுடியுமா என்பது சந்தேகமானது

சமய குரவர்களின் காலமும் நாவலரின காலமும் வேறுபட்டது. நாவலரை அவர்களுடன் ஒப்பிட்டுப் பேசுதல் முடியாது. சமய குரவர்கள் தெய்வத் திருவருள்தான் எச் செயலுக்கும் காரணம் என்ற நினைப்பில் ஊறியவர்கள் அவர்களுக்கு எந்தவிதமான அபிலாஷைகளும் இருக்கவில்லை. எம்மைப்போல சில அபிலாஷைகளை உடையவராக அவதரித்தார்.

மனிதருக்கும் பல பற்றுக்கள் உண்டு. அதேபோல நாவலரும் சில நல்ல பற்றுகளைக்கொண்டிருந்தார். சைவம், தமிழ் வளர நல்ல பாடசாலைகளை நிறுவ அவற்றை வளர்க்கும் பணிக்கு நாவலர் [illegible] புலவர்கள்,பண்டிதர்கள் மத்தியில் மட்டும் வழங்கிவந்த தமிழை சாதாரணமக்களுக்கும் வனங்கியவர் நாவலர்.

நாவலரை நாம் போற்ற வேண்டுமானல் அவருடைய நூல்களை நன்கு படித்துணரவேண்டும். எதிர்காலக் குழந்தைகள் அந்த நூல்களைப் படிக்கும் வசதிகளைச் செய்யவேண்டும். நாவலரைப்போல இலக்கண வரம்புடன் நல்ல போதனைகளைத் தரும் திறமை நாவருக்கு மட்டுமே இருந்தது.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறியதாவது:

இன்றுள்ள நிலையில் திருக்குறளைப் படித்தால் எம்மிடம் போட்டி பூசல்கள் தோன்ற இடமில்லை. வாழ்க்கையில் மனத்தூய்மைவேண்டும். இந்த நிலை எமக்கு என்றும் உயர்வு தரும்.

தமிழ் பெருமையுடன் இன்று வாழ்கிறது. என்றால் அதற்கு தமிழ்ப் பெரியார்கள் தான் காரணம். இந்த எண்ணத்தை நாம் மனத்தில் நிலைக்கச் செய்யவேண்டும்.

ஒரு நாடு அறிஞர்களால் தான் பெருமையுறுகிறது நாம் அறிஞர்களைக் கௌரவிக்கத் தவறிவிட்டோம். இதனால் தான் எமக்கு விமோசனமில்லாதுள்ளது. தற்போது உள்ள காலநிலையில் நாம் அறிஞர்களுக்குரிய கௌரவத்தை வழங்கவேண்டும்.

புலவர் தா. குமாரசுவாமிப்பிள்ளை தமதுரையில் குறிப்பிட்டதாவது:

தமிழென்றால் அது மொழியை மட்டும் குறிக்காது. தமிழர் என்னும்போது பேசுகின்றவர்களை என்று மட்டும் கருதக்கூடாது. தமிழர் என்றால் இனிமையுள்ளவராக இருக்க வேண்டும். தமிழ் மொழியை பேசுபவர்களை மட்டும் தமிழர்களாகக் கொள்ளாமல் இனிமையான பண்புள்ளவர்களையும் தமிழர்களாக நினைக்கப் பழகவேண்டும்.

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் பேசுகையில், விமர்சனம் செய்வதனைச் கலகமாகத் தாகச் சிலர் கருதுவதோடு குறைகளை அடுக்கடுக்காக எடுத்துரைப்பதும் விமர்சனமே என்று தவறாக எண்ணுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

திரு. க.சி குலரத்தினம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் திருவாளர்கள் இ. நாகராஜன், செ. கதிரேசபிள்ளை, ச. வே. பஞ்சாட்சரம் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னர் இசையரங்கும் நடைபெற்றது

## வானொலிநிகழ்ச்சிகள்

### திங்கள் 16-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை.

இரவு 6-45 புல்லாங்குழல்—எம். சோமசுந்தரம், 7-15 பாட்டு—வி. நடேசன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 வாத்திய இசை, 10-00 நேயர் விருப்பம்.

## வித்தியோதய பல்கலைக்கழகம்

கொழும்பு, ஞாயிறு

வித்தியோதய பல்கலைக் கழகம் இம்மாதம் 23-ம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வித்தியோதய பல்கலைக்கழகத்திலுள்ள பிக்கு மாணவர்களுக்கும் சாதாரண மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து இப்பல்கலைக் கழகம் கடந்த மாதம் 22-ம் திகதி மூடப்பட்டது.

## பேச்சு, சங்கீதம் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுக் கிண்ணம்) கே. யசோதா - கொக்குவில் இந்து, என். இந்திராதேவி-சிதம்பரா

ஆண்கள்; கீழ்ப்பிரிவு:- டி. யோகராசா - கெல்லியடி ம. ம. வித்தியாலயம், எஸ். கருணாகரன் - யாழ். மத்திய கல்லூரி, என். இரவீந்திரன் - யாழ். இந்துக்கல்லூரி.

ஆண்கள்: மேற்பிரிவு:- சோமசுந்தரரேஸ்வரன் ஸ்கந்தா, இ. அகிலாண்டேசுவரன் பரமேஸ்வரா, எம். தங்கராசா - ஸ்கந்தா.

### கூட்டாகப்பாடல்

ஆண்கள்: கீழ்ப்பிரிவு:- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (சோமசுந்தரப் புலவர் கேடயம்) வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

ஆண்கள்: மேற்பிரிவு:- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (கதிரவேற்பிள்ளை கேடயம்) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.

பெண்கள்: கீழ்ப்பிரிவு:- வேம்படி மகளிர் (கந்தையா உபாத்தியார் கேடயம்) கொக்குவில் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி.





மொண்ட் பிளாங்க்

இலங்கையின் பிரீதிகரமான கட்டிப் பால்




ஏஜெண்டுகள்

அப்துல்ஹுசெய்ன் ஜபேர்ஜீ

19. 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு


## ஆஸ்பத்திரி விஸ்தரிப்புக்கு ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### தொழிலாளருக்கு காற்சட்டை

மலசலசுத்திப் பகுதியில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு சபையின் கணக்கால் வருடாவருடம் இரண்டு சோடிக் காற்சட்டை, மேற்சட்டை கொடுக்கப்படவேண்டுமென்று திரு. சி. நாகராசா கொண்டுவந்த பிரேரணைக்கு மழைக்கோட்டும் கோடுக்கப்பட வேண்டுமென்ற திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

முன் அறிவித்தபடி திரு. நீ. அண்டனியால் கொண்டு கொண்டுவரப்பட்ட கீழ்வரும் மூன்று பிரேரணைகளும் சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1. குடிசன நெருக்கடி நிறைந்த நாவாந்துறை மக்களின் நல்வாழ்விற்காக நாவாந்துறைக் கடற்கரையை நிரவி ஒரு வீடமைப்புத் திட்டத்தை ஆக்கித்தர வேண்டுமென்று வீடமைப்பு மந்திரியை சபை கேட்டுக் கொள்கிறது.

2. நாவாந்துறையில் வாழும் கடல்தொழில் செய்யும் மக்களின் தொழில்வசதிக் காக நாவாந்துறை முறைமுகத்தில் ஒரு 'வெளிச்சவீடு' அமைத்துத் தரும்படி மந்திரிசபை கேட்டுக் கொள்கிறது.

3. குடிஜன நெருக்கடி நிறைந்த நாவாந்துறை மக்களின் சுகாதாரவசதிகளை கவனிக்கும் பொருட்டு நாவாந்துறைக் கடற்கரையில் ஆண்களுக்கான 6 அறை பொதுசன மலக்கூடத்தைக் கட்டுவதற்கு இவ்வருடம் மத்தியில் நடைபெறவிருக்கும் உபவரவுசெலவுத்திட்டத்வில் நிதி ஒதுக்க வேண்டும்.

### பிரேரணைமீது வாக்குவாதம்

சுகாதார மராமத்து மேற்பார்வையாளர்களையும் மற்றும் அவற்றை ஒத்த பதவி வகிப்போர்களையும் அவர்கள் நிரந்தர சேவையில் 5 வருடங்களுக்கு மேற்பட கடமையாற்றியிருப்பின அவர்களை உள்ளூர் ஆட்சிச் சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இச்சபை உள்ளூராட்சி அதிகாரச் சபையைக் கேட்டுக் கொள்ளுவது என்ற பிரேரணையை திரு. அ. த. துரையப்பா கொண்டுவந்தபோது சபையில்நீண்ட நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது. இப்பிரேரணைபற்றி துரையப்பா பேசும் போது கூறியதாவது: இச்சபையில் 15 வருடகாலம் வேலை செய்த ஊழியர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடையாது. நிரந்தரம் ஆக்கப்படவில்லை. தொழிற்கந்தோர்மூலமும்பாதுகாப்பு இல்லை. சம்பளம் நினைத்ததுபோல் கொடுக்கப்படுகிறது. விரும்பிய நேரம் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள்.

மஹாதேவா: சபையில் இரண்டுவித ஊழியர்கள் கடமையாற்றுகிறார்கள். உள்ளூராட்சிக் கமிஷனரால் நியமிக்கப்பட்டோர் ஒரு பகுதியினர். சபையினால்நியமிக்கப்பட்டோர் மறுபகுதியினர். அங்கத்தவர்களுக்கே இச்சபையில் நம்பிக்கையில்லை.

அழகையா: பிரேரணை கொண்டு வந்தது நல்ல நோக்கம். ஆனால் கஷ்டத்தினை ஆராய வேண்டும். அரசாங்கம் இருக்கும் நிலையில் இப்பிரேரணை நிறைவேறினால் யாழ்ப்பாண மக்கள் இச்சபையில் இல்லாத நிலை ஏற்படும். பஸ் சேவையில் எங்கள் ஊரில் உள்ளவர்கள் மனுச்செய்தும் வெளியிடத்திலிருந்தும் ஆட்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாக இருக்க நேரிடும். அவசரப்பட்டு இதனை நிறைவேற்றாமல் யோசித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ராஜசூரியர்: அரசாங்கத்திற்காக இப்பிரேரணை கொண்டு வரப்படவில்லை. நான் அரசாங்கததுக்குப் பந்தம்பிடிக்கவில்லை. தொழிலாளர்களுக்குள்ள வசதியை இந்த அரசாங்கத்திடமிருந்து பறித்துக் கொடுக்க மறுப்பது மடமைத்தனமாகும்.

மஹாதேவா: இது சிலருக்காக கொண்டுவரப்பட்டது.

துரையப்பா: ஒருவருக்காகவும் கொண்டுவரப்படவில்லை. நிறைவேற்றினாலும்சரி, விட்டாலும்சரி நடவடிக்கை எடுக்கப்படும். 5 வருடத்துக்கு மேல் வேலையில் இருந்தவர்களை நிரந்தரமாக்க முடியுமென்று உள்ளூராட்சி சேவையில் ஒருசட்டம் இருக்கிறது. தனிபட்டவர்களுக்காகக் கொண்டுவந்தது என்பது சரியல்ல

மஹாதேவா: இது நிறைவேற்றியபின் தமிழர் அனுப்பப்படுவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

துரையப்பா: தமிழர் அனுப்பபடமாட்டார்கள் என்பதை எப்படி நிரூபிக்க முடியும்.

மஹாதேவா: 1964-ம் ஆண்டுக்குபபின் புது உத்தியோகஸ்தர்களை வைக்கக்கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது

ராஜசூரியர்: தற்போது இருப்பவர்களுக்கு மட்டும் கேட்கிறோம்.

நாகராசா: சபையிலுள்ளவர்கள் கை உயர்த்தினால் அது தான் சரியல்ல தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசுபவர்கள் திருத்தப் பிரேரணை கொண்டுவரட்டும்.

துரைராஜசிங்கம்: இந்தச் சபையால் வேலைக்கு அமர்த்தப்படுகிறவர்கள் எப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் கடைமயாற்றலாம். உள்ளூர் ஆட்சியினரால் அமர்த்தப்படுகிறவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவார்கள். இதிலுள்ள கஷ்டத்தையும் ஆராய வேண்டும். உள்ளூர் ஆட்சியில் சேர்ந்தால் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

கந்தையா: அவர்கள் விரும்புகிறார்கள்!

இப்பிரேரணைக்கு சாதகமாக ஏழு வாக்குகளும் பாதகமாக எட்டு வாக்குகளும் கிடைத்ததால் பிரேரணை தோல்வியடைந்தது.

## கூப்பன் துண்டு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புதம் விற்பனைசெய்வது சட்டத்துக்கு விரோதமானது.

கூப்பன் துண்டை மட்டும் கொண்டுவந்தால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டாமெனவும் பங்கீட்டரிசிப் புத்தகத்தைக் கொண்டுவரும்படி வற்புறுத்தப்பட வேண்டுமெனவும் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் சில்லறை டிபோக்களுக்கும் அறிவிக்கப்பட்டுளளது. துணி விநியோகம் செய்யும்போது வழங்கும் பற்றுச்சீட்டில் பங்கீட்டரிசிப் புத்தகத்தின் இலக்கத்தை எழுதும்படியும் கோரப்பட்டுளளது. இவ்வித விதிகளை மீறும் எந்த ஒரு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் ஊழியர்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## பெருவெள்ளம்

### 60,000 மக்கள் பாதிக்கப்பட்டனர்

ஜாகர்த்தா, மார்ச் 15

மத்திய சுமத்திராவில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தினால் ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். 60,000-க்குமதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


வருஷ டிபாசிட் வட்டி

8%

சிலோன் றிசேவ்

லிமிற்றெட், வங்கி

யாழ்ப்பாணம்.



புன்னகை பூத்திருங்கள்!




கழுவக்கூடிய சூப்பர் குயிங்க் ரோயல் புளூ மை கொட்டுண்ட புடவைகளையும் துணிமணிகளையும் பொறுத்து கவலையே கொள்ளாதீர்கள். ஏனெனில் இந்த மை தான் பாடசாலைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த மை. காரணம் மைபட்ட உடைகளைக் கழுவி அலசியதும் கறைகள் மாயமாய் மறைந்து விடுகின்றன.

இது ஒரு

பார்க்கர் பேனா

கம்பனியின் உற்பத்தி

உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.


## அறிவித்தல்

### நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1964-ம் ஆண்டு, மார்ச் மாதம் 26-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. விண்ணப்பதாரர்கள் ஆங்கிலமும், தமிழும் எழுதவாசிக்கக் கூடியவர்களாகவும், 25 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 40 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. அவருக்கு விநியோகிக்கப்பட்ட விருந்துக்கட்டளைகள் மூலம் அவரால் வசூலிக்கப்பட்ட சகல தொகைகளுக்கும் 9% கொமிஷன் வழங்கப்படும். விருந்துக் கட்டளைகள் விநியோகிக்கப்பட்ட பின்னர் வரியிறுப்பாளர்களால் அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தப்படும் தொகைகளுக்கு கொமிஷன் வழங்குவது சம்பந்தமான விஷயம் சபையினால் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

4. நியமனத்திற்கு முன்னர், ரொக்கப்பிணையாக ரூபா ஐந்நூறும் (500/-) உத்தரவாதமளிக்கப்பட்ட கம்பெனி மூலம் ரூபா நாலாயிரமும் (4000/-) பிணையாகச் செலுத்தப்படவேண்டும்.

5. விண்ணப்பத்துடன், சமீப காலத்திய இரண்டு நற்சாட்சிப்பத்திரங்களும் இணைக்கப்படல் வேண்டும்.

மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 13-3-64 114

## ஒப்பந்த வேலை விண்ணப்ப விளம்பரம்

வேலை: 1. சங்கானை மீன் சந்தை திருத்துதல்.

2. சங்கானைப் பட்டினசபைக் கந்தோரை விஸ்தரித்துக் கட்டுதல்.

சங்கானைப் பட்டின விசேட ஆணையாளரால் 1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ம் திகதி நடுப்பகல் 12 மணிவரையில் மேற்குறிப்பிட்ட வேலைக்குரிய உறுதிப்படுத்திய விண்ணப்பங்கள் (ஸீல் வைத்த) ஏற்றுக் கொள்ளப்படும்.

26-3-64 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் இக்கந்தோரில் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 25-00 கேள்விப்பத்திர இருப்புப்பணமாகவும், கேள்விப்பத்திர செலவாக ரூபா 5-00 ம் கட்டி விண்ணப்பபபத்திரம் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி கேள்விப்பத்திரச் செலவு ரூபா 5-00 ம் திருப்பிக்கொடுக்கப் படமாட்டாது.

ஏனைய விபரங்கள் சங்கானை விசேட ஆணையாளர் அலுவலகத்தில் கந்தோர் நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. சி மாணிக்கவாசகர்,
விசேட ஆணையாளர்,
சங்கானைப் பட்டினம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சங்கானை 12-3-64. 113

# வரணி கி. ச. தலைவரும் மற்றும் மூவரும் போட்டியின்றித்தெரிவு
## நாவற்குழியில் இருவர் போட்டியில்லை

கச்சாய், ஞாயிறு

15 வட்டாரங்களைக்கொண்ட வரணி கிராமசபைக் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் உதவி தேர்தல் அதிகாரி திரு. டி. எஸ். துரையப்பாவினல் வரணி கிராமசபை அலுவலகத்தில் வைத்து ஏற்றுக்கொள்ளப்பட்டபோது தற்போதைய தலைவர் திரு. க. சரவணமுத்து போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். மற்றும் 7-ம், 9-ம், 10-ம் வட்டார அபேட்சகர்களும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

1-ம் வட்டாரம்— ஆ. நடராசா, சி. முருகன்.

2-ம் வட்டாரம்— க. சிதம்பரநாதர், வ. செல்லையர்.

3-ம் வட்டாரம்— சி. முருகுப்பிள்ளை, கு. கணபதிப்பிள்ளை, சி. வேலுப்பிள்ளை.

4-ம் வட்டாரம்— க. வீரகத்தி, கு. மருதையினுபிள்ளை.

5-ம் வட்டாரம்— க. முருகர், வே. சின்னத்தம்பி, சி. கந்தசாமி.

6-ம் வட்டாரம்— க. ஆறுமுகம், க. வேலுப்பிள்ளை.

7-ம் வட்டாரம்— ஆ. வல்லிபுரநாதர் (போட்டியில்லை)

8-ம் வட்டாரம்— க. சரவணமுத்து (போட்டியில்லை)

9-ம் வட்டாரம்— சி. சின்னத்தம்பி (போட்டியில்லை)

10-ம் வட்டாரம்— க. கிருஷ்ணர் (போட்டியில்லை)

11-ம் வட்டாரம்— சி. சுப்பு, சி. காசிப்பிள்ளை, சி. சிதம்பரம், க. கணபதி.

12-ம் வட்டாரம்— சி. கணபதிப்பிள்ளை, சி. குலசேகரம்.

13-ம் வட்டாரம்— க. சிவசுப்பிரமணியம், மு. சின்னக்குட்டி, தி. திருஞானநாயகம்.

14-ம் வட்டாரம்— க. சின்னத்துரை, க. கந்தையா.

15-ம் வட்டாரம்— க. நாகன், வே. சின்னத்தம்பி, ச. செல்லன்.

### நாவற்குழி கி. ச. நியமனம்

14 வட்டாரங்களைக் கொண்ட நாவற்குழி கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தேர்தல் உப அதிகாரி திரு. எம். எஸ். இராசசிங்கத்தினல் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது 8-ம் வட்டாரத்திற்கு சி. தம்பித்துரையும், 13-ம் வட்டாரத்திற்கு க. தர்மலிங்கமும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்கள். போட்டியிடும் அபேட்சகர்கள் பின்வருமாறு:

1-ம் வட்டாரம்— இ. செல்லையா, வே. செல்லையா.

2-ம் வட்டாரம்— மு. நல்லதம்பி, வே. கந்தையர்.

3-ம் வட்டாரம்— க. வேலாயுதம், சி. சிதம்பரன், த. செல்லத்துரை.

4-ம் வட்டாரம்— ச. சின்னத்தம்பி, ந. வயிரவன், க. தம்பிப்பிள்ளை.

5-ம் வட்டாரம்— த. சங்கரப்பிள்ளை, ச. மாணிக்கன்.

6-ம் வட்டாரம்— கா. ஆறுமுகம், ஞா. முத்துகுமாரசாமி.

7-ம் வட்டாரம்— க. ஐயாத்துரை ஆச்சாரி, சி.கதிரவேலு.

8-ம் வட்டாரம்— சி. தம்பித்துரை (போட்டியில்லை)

9-ம் வட்டாரம்— சி. கதிரன், க. தம்பிராசா, செ. தம்பிராசா.

10-ம் வட்டாரம்— ச. குமரையா, வே. சிவசுப்பிரமணியம் தற்போதைய தலைவர்)

11-ம் வட்டாரம்— வே. பொன்னம்பலம், சி. சற்குணசிங்கம்.

12-ம் வட்டாரம்— இ. சட்டநாதர், க. அம்பலவாணர்.

13-ம் வட்டாரம் — க. தர்மலிங்கம் (போட்டியில்லை)

14-ம் வட்டாரம்— வி. சதானந்தன், வி. குமாரசாமி.


வெற்றிகரமான 3-வதுவாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அக்டோபருக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

யம் அதிபர்கள், தலைமையாசிரியர்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

சிங்களக் காசோலைகள் அனுப்பப்படுவது சம்பந்தமாக கல்வி அதிகாரியை தூது கோஷ்டி கடந்த வாரத்தில் சந்தித்துப் பேசியபோது தற்காலிகமாக ஆங்கிலத்தில் காசோலைகள் அனுப்பப்பட்டாலும் அது நிலைக்குமென உறுதியளிக்க முடியாதென அந்த அதிகாரி தெரிவித்தாராம். இதனைத் தொடர்ந்து தலைமையாசிரியர்கள். அதிபர்கள் கூட்டு முன்னணி அமைத்து தமது கோரிக்கையை கல்வி அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள எண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

கூட்டு முன்னணி அமைப்பதற்கான ஏற்பாடுகள் வெகு விரைவில் பூர்த்தியடைந்ததும் இந்தக் கூட்டணி உருவாகுமெனத் தெரிகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குடும்பத்தின் கதி என்னவோ? பாவம்!

கொழும்பு வந்துவிட்டது. ஏனோ தெரியவில்லை விலங்கிடாமலே அவரை கொம்பனித்தெரு முகாமுக்கு அந்த பொலிஸ்காரர் அழைத்துச் சென்றார்.

* * *

சென்ற வெள்ளி, சனிக்கிழமைகளில் நடந்த ரோயல்-தோமஸ் கல்லூரி கிரிக்கெட் "யுத்தம்" பிரமாதப்பட்டது. ஆங்கிலப் பத்திரிகைகளிலும், ரேடியோவிலும் அதிக விளம்பரங்கள். தோமஸ் கல்லூரியினர் ஒரு சவப்பெட்டி மீது 'ரோயல்' என்று எழுதி அதைத் தூக்கிச் சென்றனராம்! எவ்வளவு பண்பு எத்தனை அன்பு!

விளையாட்டுப் பந்தயங்கள், மாணவர்களிடையே நல்லுறவையும் நற்பண்பையும் வளர்க்க ஏற்பட்டவை. ஆனல் பல்லாண்டுகளாக நடக்கும் இந்த இரு கல்லூரி கிரிக்கெட், இதற்கு நேர்மாறான விளைவுகளை மாணவர்களிடையேவளர்ப்பது விபரீதம்.

நாடெங்கு முள்ள பல கல்லூரிகளுக்குமிடையே பந்தயம் வைத்து இறுதிப் பந்தயங்களுக்கு இவ்வித விளம்பரம் அளிப்பது மேலாக இருக்கும். அதைவிட்டு சில கொழும்புக் கல்லூரிகளுக்கு மட்டும் வானெலியில் இவ்வித விளம்பரமும் முக்கியமும் அளிப்பது சரியாகாது. இதைப்பற்றிப் புனராலோசனை செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது.

* * *

ஊனையார் தலையிற்பலி கொண்டுழல், வானைவானவர் தாங்கள் வணங்கவே, தேனையார் குழலாளை யொர்பாகமா, ஆனையிருரியார் அன்னியூரரே.

—திருநாவுக்கரசர்

## 500 கொரில்லாக்கள் கைது!

சைகோன், மார்ச் 15

சைகோனிலிருந்து 75 மைல் மேற்கே அரசாங்க துருப்புகள் 500 கொரில்லாக்களைக் கைது செய்துள்ளனர் என்றும் இவர்களில் அனேகர் வியட்கொங்கைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## டகோமியில் சண்டை

டகோமி, மார்ச் 15

டகோமியில் அரசாங்க துருப்புகளுக்கும், கிளர்ச்சிக்காரருக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் பலர் மாண்டுவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியாக உள்ள புதிய கைத்தொழில்களைப் பழக மாணவர்கள் முன் வரவேண்டும்". குடிசைக் கைத்தொழில் மூலம் நமது நாட்டுப் பெண்மணிகள் அதிக தொழில் கலைபெறலாம்.

இந்துசமய சமுதாயத்தில் இந்துப் பெண்கள் பரம்பரை பரம்பரையாக ஓர் முக்கிய ஸ்தானத்தை வகித்து வருகிறார்கள். இந்துசமய வாழ்க்கையை நாம் நடத்துவதன் மூலம் நாம் உயர்ந்த ஸ்தானத்தை அடைவதுடன் எம்மை பின்பற்றுவோர்களும் உயர்ந்த நோக்குகளுடன் வாழலாம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெண்மணிகளை நாம் அரசியல் குடும்பங்களிலும் காண்கின்றோம். பாண்டிய அரச பரம்பரையில் பிறந்த மங்கையர்க்கரசியார் தனது நாட்டையே சைவசமயமாக மாறியது குறிப்பிடத்தக்கது. தனது மந்திரிமாரின் உதவியுடன் மங்கையர்க்கரசியார் பாண்டியநாட்டில் சைவசமயத்தைப் போதித்ததுடன் நாட்டுமக்களையும் சிறந்தமுறையில் ஆட்சிசெய்து வந்தார். சங்ககாலத்தில் பெண்மணிகள் நாட்டு பற்றுடையவர்களாகவும், வீர மங்கையர்களாகவும் திகழ்ந்தனர். போர்க்களத்துக்குச் சென்ற தங்களது புத்திரர்கள் புறமுகிகுகாட்டி ஓடினலோ, அல்லது அப்புத்திரர்களுக்குப் புற முதுகில் காயமேற்பட்டாலோ தங்கள் உயிரையே கொடுக்கச்சித்தமாயிருந்தனர். நமது பெண்கள் பண்டைய பெண்களின் வாழ்க்கைமுறைகளையும் காலத்திற்கேற்ற முறையில் கைக்கொள்ளவேண்டும்"

கல்லூரி அதிபர் செல்வி பி. ஆறுமுகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கல்வி என்பது மாணவர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய முப்பாலினரின் முக்கோண தொடர்புடையது. பிள்ளைகளின் கல்வி விருத்தியில் பெற்றோருக்குப் பிரதானமான பங்குண்டு பாடசாலைக் கல்வியினல் பிள்ளைகள் முன்னேற்றமடையவேண்டுமானல் ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைக்க வேண்டும். ஒரு சமுதாயத்தின் செல்வப்பெருக்கம் பிள்ளைகளின் ஊக்கம் — உழைப்பு, உறுதி, பண்பாடு ஆகிய இவற்றிலேதான் தங்கியிருக்கிறது இரு எருதுகளும் ஒத்திழுப்பதினல் வண்டி முன்னேறுவதுபோல பெற்றோர் ஆசிரிய இரு திறத்தினரின் ஒத்துழைப்பினலே தான் இவ்வித வளர்ச்சியைக் காணமுடியும்."

திருமதி எம். ஸ்ரீகாந்தா பரிசில்கள் வழங்கினர். கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வர சுவாமி கோவில் 8-ம் திருவிழாவில் பண்டிதை திருவாட்டி சத்தியதேவி துரைசிங்கம் "திலகவதியார்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

## திருட்டு வழக்கில் ஒருவர் கைது

அல்லைப்பிட்டி, ஞாயிறு

அல்லைப்பிட்டி வசீகர் சனசமூக நிலையத்தின் ரேடியோ, பட்டறி, ஒலிபெருக்கி ஆகியவை திருடப்பட்டது சம்பந்தமாக பொலிசாரும், கிராம சேவையாளரும், சனசமூக நிலைய உறுப்பினர்களும் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக சந்தேகத்தின்மீது ஒருவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டிக் கிராம சேவையாளர் யாழ்ப்பாணப் பொலிசாரின் உதவியுடன் இவரைக் கைது செய்துள்ளதாக அறியப்படுகிறது.

## மண்ணெண்ணை குடித்து குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கானை கிழக்கில் பெரியான் முருகன் என்பவரின் 11 மாதக் குழந்தை ரவீந்திராதேவி விளையாடிக்கொண்டிருந்தபோது போத்தலில் வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணையைக் குடித்ததன் பேரில், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரணமானது. விபத்தினல் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

## நித்திரையில் பாலூட்டினர் அன்னை
### புரைக்கேறி குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தன் செல்லையாவின் மைம்பெண்ணன ஆச்சிக்குட்டி என்பவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தான் பிரசவித்த குழந்தைக்கு பால் கொடுத்துக்கொண்டிருந்தபோது தற்செயலாக நித்திரையில் ஆழ்ந்துவிட்டார். ஆனல் விடியற்காலையில் பால் குடித்தபடியே குழந்தை இறந்துகிடந்தது. இதுசம்பந்தமாக திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

டாக்டர் வி. தங்கராஜசிங்கம் பிரேதபிரிசோதனையில், பால் புரைக்கேறி பிள்ளை இறந்ததாகக் கூறினர்.

விபத்தினல் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி, நித்திரையில் இவ்வாறு செய்தால் என்ன ஆகும் என்பதற்கு இது உதாரணம் என்றும், இவ்வித கவலையீனம் காட்டக்கூடாது என்றும் அறிவித்தார்.

## கூப்பன் அரிசியால் பலருக்கு நோய்

காங்கேசன்துறை ஞாயிறு

இப்பகுதியில் விநியோகிக்கப்படும் கூப்பன் அரிசியை உண்டதன் காரணமாக பலர் வயிற்றோட்டம், வயிற்றுழைவு ஆகியஉபாதைகளால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்: தொடர்ந்தும் இதே அரிசி விநியோக்கப்பட்டு வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## 60000 பேர் வீடிழந்தனர்

ஜாகர்த்தா, மார்ச். 15

மத்திய சுமத்திராவில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்தனர் என்றும் 60000 பேர் வெள்ளப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## சாகித்திய அக்காடமி

புதுடில்லி, மார்ச் 15.

சாகித்திய அக்காடமி ஸ்தாபிக்கப்பட்ட கடந்த 10 ஆண்டுகளில் மொத்தம் 87 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றனர் 300 க்கு மேலான நூல்களை அது 16 மொழிகளில் வெளியிட்டிருக்கிறது. ஐ. நா. கல்வி, சமூக கலாச்சார ஸ்தாபனத்தின் உதவியுடன் வெளிநாடுகளில் பல நூல்கள் வெளியிடப்பட்டன. காந்திஜியின் சில நூல்களும், ஆதிகிரந்தமும், ராஜாஜி ஆங்கிலத்தில் எழுதிய கம்பராமாயணத்தின் அயோத்தியாகாண்டம், மலையாளக் கவிதை ஆகியனவும்ஐ.நா. உதவியுடன் வெளிநாட்டில் வெளியிடப்பட்டன.